RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 246 | செப்டம்பர்.7 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## கட்சிப் பொறுப்புகளில் இருந்து செங்கோட்டையன் விடுவிப்பு: எடப்பாடி பழனிசாமி அதிரடி

சென்னை, செப்.07-

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கழக அமைப்புச் செயலாளர் மற்றும் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக,, நேற்று (வெள்ளிக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், அதிமுகவில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தனது கருத்தை தெரிவித்திருந்தார். இந்நிலையில் இன்று அவரது அதிமுக ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டம் கழக அமைப்புச் செயலாளர் மற்றும் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புகளை பறித்துள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி.



இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கழக அமைப்புச் செயலாளர் மற்றும் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புகளில் இருக்கும் கே.ஏ.செங்கோட்டையன், எம்எல்ஏ இன்று முதல் அப்பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்." என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, திண்டுக்கல்லில் உள்ள தனியார் ஓட்டலில் இன்று காலை அதிமுக மூத்த நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, ஓ.எஸ். மணியன், திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், காமராஜ் மற்றும் விஜயபாஸ்கர் ஆகியோர் ஒரே அறையில் சந்தித்து ஆலோசனை நடத்தினர். அந்த சந்திப்பைத் தொடர்ந்து இந்த முக்கிய அறிவிப்பு வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

# அமெரிக்காவுடனான நல்லுறவை பிரதமர் மோடி மதிக்கிறார்: ஜெய்சங்கர் கருத்து

புதுடெல்லி: செப்.7-

அமெரிக்காவுடனான இந்தியாவின் நல்லுறவுக்கு பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும், அதிபர் டொனால்டு ட்ரம்ப்புடன் எப்போதும் வலுவான தனிப்பட்ட உறவை கொண்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து பேசிய ஜெய்சங்கர், "அமெரிக்காவுடனான நமது நல்லுறவுக்கு பிரதமர் மோடி மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். அதிபர் ட்ரம்ப் விஷயத்தில், பிரதமர் மோடி எப்போதும் மிகச் சிறந்த தனிப்பட்ட நல்லுறவைக் கொண்டுள்ளார். ஆனால் விஷயம் என்னவென்றால், நாங்கள் அமெரிக்காவுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். இந்த நேரத்தில், அதற்கு மேல் என்னால் சொல்ல முடியாது" என்று அவர் கூறினார்.



ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவது தொடர்பாக, இந்தியா மீது அமெரிக்கா 50 சதவீத வரி விதித்துள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சில நாட்களுக்கு முன்பு ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் "இருண்ட சீனாவிடம் இந்தியாவை இழந்துவிட்டோம்" என்று தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து, வெள்ளிக்கிழமை வாஷிங்டனில் பேசிய ட்ரம்ப், "நான் எப்போதும் மோடியுடன் நண்பராக இருப்பேன், அவர் ஒரு சிறந்த பிரதமர். ஆனால் இந்த குறிப்பிட்ட தருணத்தில் அவர் என்ன செய்கிறார் என்பது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இந்தியாவும், அமெரிக்காவும் ஒரு சிறப்பான உறவைக் கொண்டுள்ளன. எனவே கவலைப்பட ஒன்றுமில்லை." என்று கூறினார்.

ட்ரம்ப்பின் இந்தப் பேச்சுக்கு எக்ஸ் தளத்தில் பதிலளித்த பிரதமர் மோடி, "அதிபர் ட்ரம்பின் உணர்வுகளையும், எங்கள் உறவுகள் குறித்த நேர்மறையான மதிப்பீட்டையும் ஆழமாகப் பாராட்டுகிறேன், முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறேன். இந்தியாவும் அமெரிக்காவும் மிகவும் நேர்மறையான மற்றும் தொலைநோக்கு பார்வையுடைய நல்லுறவை கொண்டுள்ளன." என்று தெரிவித்திருந்தார்.



## நயினார் நாகேந்திரனுக்கு கூட்டணி கட்சிகளை சரியாக கையாளத் தெரியவில்லை: டிடிவி தினகரன்

மதுரை, செப்.07-

"நயினார் நாகேந்திரனுக்கு கூட்டணிக் கட்சிகளை கையாளத் தெரியவில்லை." என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் மதுரையில் கூறியதாவது: மோடி பிரதமராக வேண்டும் என்ற நோக்கத்துக்காகத்தான் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்தோம். மக்களவைத் தேர்தல் வேறு, சட்டப்பேரவை தேர்தல் வேறு.

தற்போது அவர்கள் பழனிசாமியை முதல்வராக அறிவித்தார்கள். அதைப் பற்றி என்னிடம் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு யாரை எதிர்த்து, எதற்காக கட்சி ஆரம்பித்தோம் என்றும், அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க முடியுமா? என்றும் கேட்டோம். அதிமுக ஆட்சிக்கு வர, அக்கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் முடிவெடுக்க வேண்டும். எங்களுடைய இந்த இடர்பாடுகள் நீக்கப்பட்டால் நாங்கள் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வருவோம்.

முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் ஆட்சி அமைத்தபோது, அவரை விட மூத்த அரசியல்வாதிகள் அவருடன் இணைந்தனர். அதைப்போன்று, தவெக கூட்டணியில் விஜய்யுடன் நாங்கள் இணைந்தால் என்ன தவறு. பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலைதான், எங்களை தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் கொண்டுவந்தார். அவர் தலைமை பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டது எங்களுக்கு அதிர்ச்சியான ஒன்றுதான்.

ஓ.பன்னீர்செல்வம் விஷயத்தில், தற்போதைய மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் செயல்பாடு அதிருப்தி அளிக்கிறது. அவருக்கு கூட்டணி கட்சிகளை சரியாக கையாளத் தெரியவில்லை. இதே நிலைதான் நமக்கும் ஏற்படும் என்பதால், கூட்டணி விலகல் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அதிமுக தலைமையும் எங்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கவில்லை. இதே நிலை நீடித்தால், அதிமுக மீண்டும் ஆட்சி அமைப்பது கடினம் என அவர் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் தொண்டர்கள் ஓரணியில் இணைவது அதிமுகவுக்கு நல்லது என்ற செங்கோட்டையன் கருத்தை நான் வரவேற்கிறேன். இதை, அங்குள்ள கட்சி தலைமை, தொண்டர்கள் உணரவில்லை என்றால், மீண்டும் அதிமுக ஆட்சி அமைவது கடினம். தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுகவுக்கான இடர்பாடுகள் களையும்பட்சத்தில் அந்த கூட்டணியில் இணைவோம்.

எங்களின் முதல் முக்கியத்துவம் அக்கூட்டணி தான். இல்லாவி ட்டால், மற்ற கூட்டணியில் இணைவோம். அது எந்தக் கூட்டணியாகவும் இருக்கலாம். நாங்கள் எதற்காகவும், யாருக்கும் அடி பணிய மாட்டோம். கண்டிப்பாக திமுகவுடனும், சீமானுடன் கூட்டணி அமைக்க மாட்டோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். பேட்டியின்போது அருகில் மாவட்டச் செயலாளர் டேவிட்அண்ணாத்துரை மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## கட்சி ஜனநாயகம் பற்றி மேடையில் மட்டும்தான் எடப்பாடி பேசுகிறார்: செங்கோட்டையன் விமர்சனம்

கோபி, செப்.07-

"ஜனநாயக முறைப்படி எங்கள் கட்சியில் யார் வேண்டுமானாலும் பேசலாம் என மேடையில் மட்டுமே எடப்பாடி பேசுகிறார். நான் அதிமுக ஒருங்கிணைப்பு பற்றி பேசியது குறித்து கட்சி ஜனநாயக முறைப்படி என்னிடம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும்." என்று தனது கட்சிப் பொறுப்புகள் பறிப்பு குறித்து செங்கோட்டையன் எதிர்வினையாற்றியுள்ளார்.

முன்னதாக அதிமுக முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனை கட்சிப் பொறுப்புகளில் இருந்து விடுவித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவி ட்டிருந்தார்.

இந்நிலையில், கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், "நேற்றைய தினம் பத்திரிக்கையாளர்களை



சந்தித்து கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் என பிரிந்து சென்றவர்கள் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும் என தெரிவித்தேன். அதற்கு கட்சி ஜனநாயக முறைப்படி என்னிடம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். ஜனநாயக முறைப்படி எங்கள் கட்சியில் யார் வேண்டுமானாலும் பேசலாம் என மேடையில் மட்டும் பேசுகிறார் எடப்பாடி.

அதிமுக ஒன்றிணைய வேண்டுமென்று தொண்டர்கள், பொதுமக்கள் வேண்டுகோள் வைக்கிறார்கள். காலில் வேண்டுமானாலும் விழுகின்றேன்; இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று பிரிந்து சென்றவர்கள் கூறுகின்றனர் அதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. இந்நிலையில், புரட்சித் தலைவரால் இந்த இயக்கத்தில் தொடர்கிற என் போன்றோர் கட்சி ஒன்றிணைய வேண்டும் என்று கூறுவது இந்த இயக்கத்திற்கு நல்லது. அதனால்தான் இந்த கருத்தை வெளியிட்டேன். அதிமுகவை ஒருங்கிணைப்பதில் எனது பணி தொடரும்.

என்னை நீக்குவதால் கட்சிக்கு பாதிப்பா என்பதை காலம் தான் பதில் சொல்லும். அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற தொண்டர்களின் கருத்தை புறக்கணிக்கிறாரா என்பதையும் பொதுச் செயலாளர் தான் தெரிவிக்க வேண்டும்.

பாஜகவின் நயினார் நாகேந்திரன், எச்.ராஜா, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் உள்ளிட்ட அனைவரும் எனது கருத்து நியாயமானது எனத் தெரிவித்துள்ளனர். கட்சியின் நலன் கருதி இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன். எனது நலன் கருதி அல்ல." என்றார்.

அதற்கு செய்தியாளர்கள், "உங்கள் கட்சியினர் யாரும் இதுவரை உங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லையே? என்று வினவினர், "சிலர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி இருக்கிறார்கள் அது காலப்போக்கில் தான் வெளிவரும்." என்றார்.

கட்சியின் முக்கிய மூத்த தலைவர்களுடன் ஆலோசனை செய்த பின்னரே இந்த அறிவிப்பை எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளாரா? என்ற கேள்விக்கு, "இதற்கும் காலம் தான் பதில் சொல்லும்." என செங்கோட்டையன் கூறினார்.

இதனிடையே கட்சிப் பொறுப்புகளில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்பட்டதை வரவேற்கும் விதமாக கோபியை அடுத்த நம்பியூரில் அதிமுகவினர் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினார்.

## சமூக ஊடகங்களில் வரும் மிரட்டல் பதிவுகளுக்காக பாதுகாப்பு வழங்க முடியாது ஐகோர்ட் உத்தரவு

சென்னை, செப்.07-

பாதுகாப்பு வழங்க கோரி தமிழ்நாடு பாஜக ஓபிசி பிரிவு துணைத் தலைவர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. சமூக ஊடகங்களில் வரும் மிரட்டல் பதிவுகளுக்காக பாதுகாப்பு வழங்க முடியாது என்று ஐகோர்ட் தெரிவித்துள்ளது. ரூ.25 லட்சம் கேட்டு மிரட்டல் விடுத்து சமூக ஊடகங்களில் வெளியான பதிவுகளால் பாதுகாப்பு கோரி பாஜக ஓபிசி பிரிவு துணைத் தலைவர் துரை சண்முக மணிகண்டன் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

# சித்தா, ஆயுர்வேத படிப்புகளுக்கு தரவரிசை பட்டியல் வெளியீடு: கன்னியாகுமரி மாணவி முதலிடம்

சென்னை, செப்.07-

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார். கன்னியாகுமரி மாவட்ட மாணவி தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையின் கீழ் அரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை வளாகத்தில் சித்த மருத்துவக் கல்லூரி, யுனானி மருத்துவக் கல்லூரி செயல்படுகின்றன.

அதேபோல், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் சித்த மருத்துவக் கல்லூரி, மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே கோட்டாறில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி உள்ளன.

இந்த 5 அரசு கல்லூரி




களில் உள்ள 320 இடங்களில், அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு 48 இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள 272 இடங்கள் மாநில அரசுக்கு உள்ளது. இவைதவிர 29 தனியார் கல்லூரிகளில் 1,920 இடங்கள் உள்ளன. அதில் 15 சதவீதம் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படுகிறது. மீதமுள்ள இடங்களில் 65 சதவீதம் மாநில அரசுக்கும், 35 சதவீதம் நிர்வாக ஒதுக்கீட்டுக்கும் உள்ளன.

நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசு ஒதுக்கீடு இடங்கள், நிர்வாக ஒதுக்கீடு இடங்கள் மற்றும் தனியார் கல்லூரிகளின் அகில இந்திய ஒதுக்கீடு இடங்களுக்கு மாநில அரசு கலந்தாய்வு நடத்தி வருகிறது. அரசு கல்லூரிகளின் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கான 15 சதவீத இடங்களுக்கு மட்டும் மத்திய அரசு கலந்தாய்வு நடத்துகிறது.

இந்நிலையில் நேற்று சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் தகுதியானவர்களின் தரவரிசை பட்டியல்களை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார். துறை செயலர் ப.செந்தில்குமார், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் விஜயலட்சுமி, இணை இயக்குநர் மணவாளன், தேர்வுக் குழு செயலர்கரோலின், எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் நாராயணசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தரவரிசை பட்டியல்கள் https://tnhealth.tn.gov.in/ என்ற சுகாதாரத் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட மாணவி அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 4,371 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இதில், நீட் தேர்வில் 720க்கு 520 மதிப்பெண் எடுத்த கன்னியாகுமரி மாவட்ட மாணவி டி.எஸ்.பிரகதி முதலிடம் பெற்றுள்ளார். 512 மதிபெண்களுடன் ஜி.டி.இனிய சுதர்சன் 2ம் இடத்தையும், 509 மதிப்பெண்களுடன் ஆர். பாவேஷ் 3ம் இடத்தையும் பிடித்தனர்.

தனியார் கல்லூரிகளின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 1,430 பேரும் தனியார் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான பட்டியலில் 1,860 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

அரசு ஒதுக்கீட்டுக்கு மொத்தம் உள்ள இடங்களில் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின்கீழ் அரசு பள்ளி மாணவர்களுக்கு 97 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தரவரிசைப் பட்டியலில் 425 மதிப்பெண்களுடன் ஜி.பாவனா முதலிடத்தையும், 423 மதிப்பெண்களுடன் என்.அருண்குமார் 2ம் இடத்தையும், எஸ்.அன்பரசி 3ம் இடத்தையும் பிடித்துள்ளனர்.



## ''நலம் காக்கும் ஸ்டாலின்'' திட்டத்தின்கீழ் ஸ்ரீ வரத வேங்கட ரமண மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்

தேனி, செப்.07-

தேனி மாவட்டம், ஸ்ரீ வரத வேங்கட ரமண மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ''நலம் காக்கும் ஸ்டாலின்'' சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ்நாடு தூய்மைப்பணியாளர்கள் நல வாரியத்தலைவர் டாக்டர் திப்பம்பட்டி திரு.வெ.ஆறுச்சாமி அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்க தமிழ்செல்வன் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஐ. மகாலட்சுமி அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு, தாட்கோ சார்பில் 10 நபர்களுக்கு தூய்மைப் பணியாளர் நலவாரிய அடையாள அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டை மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உங்கள் குடும்பத்தின் நலன் அரசின் பொறுப்பு என்ற நோக்கத்தின் அடிப்படையில் நலம் காக்கும் ஸ்டாலின் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் வட்டாரத்திற்கு மூன்று வீதம் மொத்தம் 24 மருத்துவ முகாம் ஒவ்வொரு சனிக்கிழைமையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் இதுவரை 5 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது.

இம்முகாமில் இரத்தபரிசோதனை மற்றும் இரத்த அழுத்த பரிசோதனை, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், நுரையீரல் மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், இந்திய மருத்துவம் (ஆயுர்வேதம், சித்தா, யுனானி, யோகா, ஹோமியோபதி) ஆகிய 17 வகையான துறை சிறப்பு மருத்துவர்கள் மூலமாக மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முகாமில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.முத்துசித்ரா, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.கலைச்செல்வி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜவஹர்லால், தொழிலாளர் நல உதவி ஆணையர் திரு.மனுஜ் சியாம் சங்கர், தேனி வட்டாட்சியர் திரு.சதீஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## சங்கமங்கலம் கிராமத்தில் அன்னவாசலை சேர்ந்த இளைஞர் வெட்டி கொலை

சிவகங்கை, செப்.7-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள சங்கமங்கலம் கிராமத்தில் அன்னவாசலை சேர்ந்த காளீஸ்வரன் த/பெ ஆறுமுகம் என்ற இளைஞரை 10 பேர் கொண்ட கும்பல் வெட்டி கொலை செய்தது இதில் கீழபசலையை சேர்ந்த நபர்கள் என்றும் இக்கொலையானது ஏற்கனவே கீழப்பசலை இளைஞரை கொலை செய்ததற்கு பழிக்கு பலி என்றும் கூறுகின்றனர். மேலும் இறந்த நபர் கீழப்பசலை இளைஞர் கொலைக்கும் இவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிடுகின்றனர் மானாமதுரை காவல்துறையினர் உடனடியாக விரைந்து கொலை செய்த நபர்களை கைது செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கின்றனர்.



## வேலூர், கொணவட்டம், அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவ முகாம்

வேலூர், செப்.7-

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, கொணவட்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர் சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், 4ம் மண்டல சுகாதார அலுவலர் பாலமுருகன், மாமன்ற உறுப்பினர் சாஹிதா நித்யாஸ், மாநகர நல அலுவலர் மரு.பிரதாப்குமார், தேசிய நல்வாழ்வுகுழும மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மரு.ஆதித்யா, மருத்துவ துறைகள் சார்ந்த மருத்துவர்கள் செவிலியர்கள், அலுவலர்கள் பணியாளர்கள், பொதுமக்கள் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முதலமைச்சரின் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்பு

### கிள்ளியூர் சட்டமன்றத்திற்குட்பட்ட மலங்கரை கத்தோலிக்க பொறியியல் கல்லூரி (மரியகிரி) வளாகத்தில் நடைபெற்ற முகாமினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா பேச்சு

கன்னியாகுமரி, செப்.07-

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கிள்ளியூர் வட்டம், முஞ்சிறை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குட்பட்ட மெதுகும்மல், குளப்புரம், அடைக்காகுழி, சூழால், நடைக்காவு, மங்காடு, வாவறை ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்களுக்கு நலம் காக்கும் ஸ்டாலின் ஐந்தாம் கட்ட முகாம் மலங்கரை கத்தோலிக்க பொறியியல் கல்லூரி (மரியகிரி) வளாகத்தில் நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.ராஜேஷ்குமார் அவர்கள் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, தெரிவிக்கையில்



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் என்ற ஆரோக்கியமான திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதோடு, நகர்ப்புறத்தில் படித்த, வசதியானவர்களுக்கு கிடைக்கும் மருத்துவ சேவை, கிராமப்புறத்தில் உள்ள ஏழை, எளிய பொதுமக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

இம்முகாமில் சிறந்த முகாமில் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர். மேலும் வருகை தந்த பொதுமக்கள், பொது மருத்துவ நிபுணர் அறிவுறுத்தலின்படி, இசிஜி, எக்கோ, எக்ஸ்ரே, ஸ்கேன், காசநோய், தொழுநோய் பரிசோதனைகள், இரத்த பரிசோதனை, பெண்களுக்கான கருப்பை வாய், மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள். பரிசோதனை முடிவுகள் அனைத்தும் மொத்தமாக கோப்பு வடிவில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தமருத்துவ அறிக்கை, 'மெடிக்கல் ஹிஸ்டரி' போன்றது. எதிர்காலத்தில் நீங்கள் எந்த சிகிச்சைக்கு, எந்த மருத்துவமனைக்கு சென்றாலும் இது பயன்படும்.

அதனடிப்படையில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற முதல் முகாமில் 1650 நபர்களும், திருவட்டார் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற இரண்டாவது முகாமில் 1438 நபர்களும், கல்குளம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற மூன்றாவது முகாமில் 2850 நபர்களும், அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற நான்காவது முகாமில் 1712 நபர்களும் வெளி நோயாளிகளாக கண்டறியப்பட்டு, பரிசோதனைகள் மேற்கொண்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். தொடர்ந்து இன்றைய தினம் ஐந்தாவது முகாம் மலங்கரை கத்தோலிக்க பொறியியல் கல்லூரி (மரியகிரி) வளாகத்தில் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் 1500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ந்து மருத்துவ பரிசோதனைக்கு வருபவர்களுக்கு அனைத்து பரிசோதனையும் மேற்கொள்ள வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் முகாமில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு மருத்துவ பிரிவுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைகளை பார்வையிட்டு, வருகை தந்துள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடப்பட்டது. மருத்துவ பரிசோதனை அனைத்து மக்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முகாமுக்கு வரும் மக்களை அக்கறையுடன், பரிவுடன் கவனிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மருத்து வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்கின்றனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மருத்துவ பணிகள் இணை இயக்குநர் மரு.சகாய ஸ்டீபன் ராஜ், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.லியோ டேவிட், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, துணை இயக்குநர்கள் மரு.கிரிஜா (தொழுநோய்), மரு.ரவிக்குமார் (குடும்பநலம்), கிள்ளியர் வட்டாட்சியர் திரு.ராஜசேகர், வட்டார மருத்துவ அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி. அஜிதா, திரு.ராஜ்குமார், மலங்கரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு.மனோண்மணி, துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டார்கள்.



## வேலூர் அடுத்த வெங்கடாபுரம் ஊராட்சியில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் மற்றும் நலத்திட்ட விழா

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வெங்கடாபுரம் ஊராட்சியி புது வசூர் கிராமம் ஊராட்சி அலுவலக வளாகத்தில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றதுமற்றும் நலதிட்ட விழா லைன்ஸ் சங்க தலைவர் முனிசாமி, தலைமையிலும், செயலாளர் குமார், பொருளாளர் கோதண்டபாணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ஏ,பாபு, தீர்த்தகிரி முருகன் கோவில் அறங்காவலர் லயன்ஸ் மாவட்ட தலைவருமான கேஜி என் சீனிவாசன், கருணாகரன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, விழாவை துவக்கி வைத்து, நலதிட்ட உதவிகளை வழங்கினர். மேலும் இந்நிகழ்ச்சியில் லாயன்ஸ் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## செங்கோட்டையன் பேச்சு எதிரொலி: திண்டுக்கல்லில் மூத்த நிர்வாகிகளுடன் இபிஎஸ் திடீர் ஆலோசனை

திண்டுக்கல், செப்.07-

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அறிவிப்பையடுத்து அதிமுக மூத்த நிர்வாகிகளுடன் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திண்டுக்கல்லில் உள்ள தனியார் ஓட்டலில் நேற்று (சனிக்கிழமை) காலை ஆலோசனை நடத்தினார். முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேற்று செய்தியாளர்களை சந்தித்து அதிமுகவில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தனது கருத்தை தெரிவித்தார். இதற்கு நேற்று தேனி மாவட்டத்தில் நடந்த பிரச்சார கூட்டங்களில் எடப்பாடி பழனிசாமி பதில் அளிப்பார் என்று எதிர்பார்த்த நிலையில் அவர் பதில் அளிக்கவில்லை. இந்நிலையில் தேனி மாவட்ட பிரச்சாரத்தை முடித்து கொண்டு நேற்று வெள்ளிக்கிழமை இரவு திண்டுக்கல்லில் உள்ள தனியார் ஓட்டலில் தங்கினார். ஓய்வுக்கு பின் இன்று காலை அதிமுக மூத்த நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, ஓ.எஸ். மணியன், திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், காமராஜ் மற்றும் விஜயபாஸ்கர் ஆகியோர் ஒரே அறையில் சந்தித்து ஆலோசனை நடத்தினர். நேற்று செங்கோட்டையன் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்த கருத்து குறித்து மூத்த நிர்வாகிகளுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தியுள்ளார். அடுத்த கட்ட நகர்வு குறித்து ஆலோசனை நடத்தியதாக தெரிகிறது. முன்னதாக எடப்பாடி பழனிசாமி தங்கியுள்ள தனியார் ஓட்டலில் போலீஸார் மோப்பநாய் உதவியுடன் சோதனை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.





## பெரியகோட்டை உலகுடையம்மன் கோவில் முளைப்பாரி உற்சவ விழா

### திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி பங்கேற்பு..

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகேயுள்ள பெரியகோட்டை கிராம தேவேந்திர குல வேளாளர் மக்களால் வணங்கி வழிபட்டு வரும் அருள்மிகு உலகுடையம்மன் கோவில் முளைப்பாரி உற்சவ விழாவானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது..

பெரியகோட்டை கிராமவாசியும், திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அறங்காவலருமான ஏஆர். ஜெயமூர்த்தி கோவில் திருப்பணிகளில் தேவேந்திரர் தெருமக்களுடன் ஈடுபட்டார்...

கோவில் வளாகத்தில் பெண்கள் மற்றும் ஆண்கள் தனித்தனியாக கும்மியடித்து குலவையிட்டு வழிபாடு செய்தனர்... திருவிழாவின்போது மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை நடத்தினர்...

கோவில் முதல் நாள் நிகழ்ச்சியாக பநதல்கால் நடுதல், அதற்கடுத்ததாக முத்து பரப்புதல் , காப்புக்கட்டுதல் , தேவேந்திர குல வேளாளர் சமுதாயக் கூடத்திலிருந்து மந்தையம்மன் சாவடிக்கு வேப்பிலை கரகம் எடுத்து வருதல், முளைப்பாரி உற்சவ விழா என வெகுசிறப்பாக திருவிழாவானது நடைபெற்றது... நிகழ்ச்சியின் இறுதி நாளில் முளைப்பாரிகளை ஆற்றில் கரைத்தல் நிகழ்வு நடைபெற்றது.. அன்று இரவு கிராமியப் பாடகர் அம்பலநாதன் அவர்களின் இன்னிசைக் கச்சேரியுடன் திருவிழா நிறைவுற்றது...

# அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் தப.சிதம்பரம் ஆகியோர், தனியார் பங்களிப்புடன் கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டப்பட்டுள்ள கிளை நூலகத்திற்கான புதிய கட்டிடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்



சிவகங்கை, செப்.07-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு.ப.சிதம்பரம் அவர்கள் ஆகியோர் சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ள கிளை நூலகத்திற்கான புதிய கட்டிடத்தினை, சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கார்த்தி ப சிதம்பரம் அவர்கள் முன்னிலையில், பொதுமக்களின்பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் தமிழகம் முழுவதும் அனைத்து பகுதிகளிலுள்ள நூலகங்கள் மேம்படுத்தப்பட்டு, வாசகர்கள், மாணாக்கர்கள், பொதுமக்கள் ஆகியோர் அதன் வாயிலாக பயன்பெற்று வருகின்றனர்.

பண்டைய காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் புகழினை அறிந்து கொள்வதற்கும். தமிழர்களின் நாகரிகம், பண்பாடு கலாச்சாரம் ஆகியவைகளை நாம் அறிந்து கொள்வதற்கும் நூல்கள் அடிப்படையாக திகழ்ந்து வருகிறது. அவ்வாறான பல வகையான நூல்களை பேணி பாதுகாப்பதற்கும், நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்திடும் வகையிலும், அவை பொதுமக்களுக்கு பயன்படும் பொருட்டு, அனைத்து வகையான நூலகங்கள் புத்துயிர் பெறும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில், பொருளாதார மேதை என்று அனைவராலும் அழைக்கப்படும் முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் ப.சிதம்பரம் அவர்கள் மருத்துவம் மற்றும் கல்வி மட்டுமன்றி, நூலகத்திலும் தனி கவனம் செலுத்தி அதனை மேம்படுத்திடும் பொருட்டு, கானாடுகாத்தான் பேரூராட்சி பகுதியில், பெரும் முயற்சி மேற்கொண்டு இங்கு செயல்பட்டு வந்த கிளை நூலகத்தினை மேம்படுத்திடும் பொருட்டு, குமுதம் எஸ்.ஏ.பி அண்ணாமலை செட்டியார் அவர்களின் தாயார் திருமதி லெட்சுமி ஆச்சி நினைவாக திருமதி குமாராணி டாக்டர். மீனா முத்தையா அவர்களின் பெரும் பங்களிப்புடன் இக்கிளை நூலகமானது, மேம்படுத்தப்பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும். முன்னதாக, அண்ணன் ப.சிதம்பரம் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் நமது மாவட்டத்தில் மேம்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடதக்கதாகும்.

தற்போது, நூலகத்திலும் தனி கவனம் செலுத்தி, இக்கிளை நூலகத்தினை மேம்படுத்தியது பெருமைக்கும் பாராட்டிற்கும் உரிய ஒன்றாகும். இதில், தனது சார்பில் அளித்துள்ள பங்களிப்பு மட்டுமன்றி, இப்பகுதியை சார்ந்தவர்களின் பங்களிப்பும் இருந்திட வேண்டும் என்பதற்காக இக்கிளை நூலகத்தில் முதல் தளத்தில் வாசகர்களுக்கான அறையை ஏற்படுத்தி தருவதற்கும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக கோரிக்கை விடுத்துள்ளார். இதில் எனது பங்களிப்பும் இருந்திடும் வகையில் ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் இந்நூலகத்திற்கு வழங்கப்படும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இக்கிளை நூலகத்தினை மேம்படுத்துவதற்கு இப்பகுதியைச் சார்ந்த ஒவ்வொருவரின் பங்களிப்பும் இருந்திடல் அவசியமாகும்.

இந்நூலகமானது, கடந்த 1990ல் பகுதி நேர நூலகமாகவும், 1997ல் ஊர்புற நூலகமாகவும், அதனைத்தொடர்ந்து 1999 முதல் கிளை நூலகமாகவும் செயல்பட்டு, தற்போது அண்ணன் ப.சிதம்பரம் அவர்களின் பெரும் முயற்சியால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் இந்நூலக மானது புத்துயிர் பெற்று, புது பொழிவுடன் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் 12,500 ஊரக பகுதிகளில் கிராமப்புற நூலகங்களை உருவாக்கினார். அவ்வழியில், செயல்பட்டு கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நூலகங்கள் நவீன வசதிகளுடன் வடிவமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்பணிக்கப்பட்டு வருகிறது. நூலகங்களின் தனி அக்கறை கொண்ட அரசாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு திகழ்ந்து வருகிறது.

இந்நூலகத்தினை வாசிப்பை நேசிப்பவர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரும் முயற்சியின் காரணமாக தமிழகத்திலுள்ள அனைத்து வகையான நூலகங்களும் புத்துயிர் பெற்று, பொதுமக்கள், புத்தக வாசிப்பாளர்கள், மாணாக்கர்கள் ஆகியோர்களுக்கு பயனுள்ள வகையில் திகழ்ந்து வருகிறது.

எனது பங்களிப்புடன் மாவட்டத்தில் கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்து எனது சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மட்டுமன்றி, நூலகங்களை மேம்படுத்துவதற்கான பணிகளும் நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க குமுதம் எஸ்.ஏ.பி அண்ணாமலை செட்டியார் அவர்களின் தாயார் திருமதி லெட்சுமி ஆச்சி நினைவாக திருமதி குமாராணி டாக்டர். மீனா முத்தையா அவர்களின் பெரும் பங்களிப்புடன் இங்கு செயல்பட்டு வந்த கிளை நூலகமானது, நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கிளை நூலகத்திற்கான புதிய கட்டிடத்தினை நான் கோரிக்கை விடுத்ததும் கட்டித்தந்தமைக்காக எனது மனமார்ந்த பாராட்டுக்களை இத்தருணத்தில் அக்குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலகத்தில் தற்போது தரைதளம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில், முதல் தளம் ஏற்படுத்துவதற்கென தமிழ் அன்பர்களும், செல்வந்தர்களும் தங்களது பங்களிப்பை அளித்திடல் வேண்டும். இதுதவிர, இப்பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக பத்து புத்தகங்களை வாங்கித் தந்து, இக்கிளை நூலக மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்திடல் வேண்டும்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், தனிப்பட்ட முறையில் தனது பங்களிப்பை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, நிதி வழங்குவதாக என்னிடம் தற்போது கூறினார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்று, மாவட்டத்தின் வளர்ச்சிக்கு ஒவ்வொருவரின் பங்களிப்பினை ஏற்படுத்தி, ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாநிலங்களவை உறுப்பினர் திரு.ப.சிதம்பரம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாங்குடி அவர்கள், நன்கொடையாளர் திருமதி குமாராணி டாக்டர். மீனா முத்தையா அவர்கள், கானாடுகாத்தான் பேரூராட்சி தலைவர் திருமதி ராதிகா, மாவட்ட நூலக அலுவலர் (பொ) திரு.திருஞானசம்பந்தம், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி கவிதா மற்றும் திரு.கருப்பையா, கானாடுகாத்தான் நூலகர்கள் திரு.சங்கரலிங்கம், திரு.செல்வம் மற்றும் வாசக வட்டத்தை சார்ந்தோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# மாணவர்கள் படிக்கும்போதே தொழில் முனைவோர்களாக உருவாக தமிழ்நாடு அரசு வழங்கும் திறன்மேம்பாட்டு பயிற்சியினை முழுமையாக பயன்படுத்த வேண்டும்

## ஆயுர்வேத மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவு தொடர்பான ஒரு நாள் தேசிய கருத்தரங்கில் அமைச்சர் த.மனோ தங்கராஜ் பேச்சு

கன்னியாகுமரி, செப்.07-

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சார்பில் ஆயுர்வேத மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவு தொடர்பான ஒரு நாள் தேசிய கருத்தரங்கினை நாகர்கோவில் ஹோட்டல் லான்ஸ் இன்டர்நேஷனலில் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மருத்துவர்.ஜெ.கிளாரன்ஸ் டேவி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசு மாநில உணவு ஆணையத்தலைவர் திரு.என்.சுரேஷ் ராஜன் அவர்கள் முன்லையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கினை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பேசுகையில்

பெருகிவருகின்ற நகரமயமாக்கல் போன்ற பல்வேறு சூழ்நிலைகளினால் ஏற்பட்டிருக்கும் மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தினால் ஏற்படும் அழுத்தின் காரணமாக பல்வேறு புதிய நோய்கள் உருவாகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு சித்தா, யுனானி, ஆயுர்வேத போன்ற மருத்துவத்தில் சிறந்து விளங்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் கன்னியாகுமரி அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சிறந்த முறையில் ஒரு நாள் கருத்தரங்கானது நடைபெற்று வருகிறது. இம்முகாமினை சிறப்பாக நடத்துவதற்கு பல்வேறு வல்லுநர்கள் உரையாற்றுகின்றனர். மேலும் "Chat with Entrepreneurs" என்ற தலைப்பில் தொழில் முனைவோருடன் உரையாடும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் தமிழ்நாடு அரசின் குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையும் பங்கேற்றுள்ளது. இந்நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய கல்வி முறையில் நிறைய தவறு இருக்கிறது. கல்வியை மாணவர்களே தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லாமல் பெற்றோர்களால் அல்லது ஆசிரியர்களால் தூண்டும் படிப்பதை தான் படிக்க வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு படித்தால் படித்து முடித்ததும் அரசு வேலை வேண்டும் என்று நினைக்கிறார்கள். படித்ததை வைத்து தொழில் தெடங்க முன்வருவது இல்லை. மேலும் யாரை கேட்டாலும் டாக்டருக்கு படிக்க வேண்டும், ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். ஆயுர்வேத துறை தேர்ந்தெடுத்து படிப்பவர்கள் குறைவு. எனினும் படிக்க வந்த பிறகு அதில் திறமையை வெளிப்படுத்த வேண்டும். மருத்துவத்துறையில் படிக்கும் மாணவர்கள் சான்றிதழுக்காக மட்டும் படிக்க கூடாது. ஆராய்ச்சிகளையும் செய்ய வேண்டும். ஏன் எனில் எந்த மூலிகையை எதோடு சேர்த்தால் என்ன மருந்து கிடைக்கும் என்பது ஆராய்ச்சி செய்தால் தான் தெரியும். நம் முன்னோர்கள் சித்த மருந்துகளை ஆராய்ந்து தான் கண்டறிந்தார்கள்.

தண்ணீர், காற்று மாசுவால் உடல் பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது. பழைய கால உணவு பழக்க வழக்கத்தில் ஆரோக்கியம் இருந்தது. ஆனால் அது மாறிவிட்டது. மேலும் உடற்பயிற்சியில் இருந்து வெளியே வந்துவிட்டோம். இதனால் உடல் வலு குறைகிறது. பழைய காலத்தில் நாடிதுடிப்பு பார்த்தே நோயை கண்டறிந்து விடுவார்கள். மாணவர்கள் படிக்கும்போதே தொழில் முனைவோர்களாக உருவாக தமிழ்நாடு அரசு வழங்கும் திறன்மேம்பாட்டு பயிற்சியினை முழுமையாக பயன்படுத்த வேண்டும் இவ்வாறு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசு மாநில உணவு ஆணையம் தலைவர் என்.சுரேஷ் ராஜன் அவர்கள் முன்னிலையில் தொகுப்பாளர் மரு.மோ.செ.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய ஆயுர்வேதம் தொடர்பான புத்தகத்தை வெளியிட்டார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், துணைமேயர் மேரி பிரின்ஸி லதா, மேற்கு மண்டல தலைவர் பா. செல்வகுமார், பேராசிரியர்கள், துறை அலுவலர்கள், மாணவ மாணவியர்கள்,உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ மதுரை மாவட்டம் தமுக்கம் மைதானம் மாநாட்டு மையத்தில் புத்தகத் திருவிழா2025 மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் இன்று (59 2025) குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து அரங்குகளை பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, செப்.07-

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.56 மற்றும் 57 பகுதிகளுக்கு ஆரப்பாளையம் புட்டுத்தோப்பு மெயின் ரோடு பகுதியில் உள்ள எம்.ஏ.வி.எம்.எம். திருமண மகாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை இன்று (06.09.2025) பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாமினை கடந்த 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்து உள்ளார்கள். அதன் தொடர் நிகழ்வாக மதுரை மாநகராட்சியில் கடந்த 17.07.2025, 24.07.2025, 31.7.2025, 02.08.2025, 07.08.2025, 08.08.2025, 12.08.2025, 14.08.2025, 19.08.2025, 20.08.2025, 21.08.2025, 2208.2025, 23.08.2025 26.08.2025, 28.08.2025, 30.08.2025, 02.09.2025 மற்றும் 04.09.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

அதனை தொடர்ந்து இன்று (06.09.2025) மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (வார்டு எண்.38, 39) வண்டியூர், தாகூர் மேல்நிலைப்பள்ளி, மண்டலம் 3 (வார்டு எண்.56, 57) புட்டுத்தோப்பு மெயின் ரோடு, எம்.ஏ.வி.எம்.எம். திருமண மகால், மண்டலம் 4 (வார்டு எண்.41, 42) அனுப்பானடி, சௌராஷ்டிரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்டலம் 5 (வார்டு எண்.81, 82) ஜெய்ஹிந்துபுரம் கிரேஷ் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது, மாண்புமிகு மேயர் அவர்கள் மண்டலம் 3 (வார்டு எண்.56, 57) எம்.ஏ.வி.எம்.எம். திருமண மகாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வில் உதவி ஆணையாளர்கள் திரு.பிரபாகரன், திரு.ரவிக்குமார், திருமதி. இராதா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், நிர்வாக அலுவலர்கள் திரு.சுரேஷ் பாபு, திரு.சிவக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ஜென்னியம்மாள் திரு.கதிரவன், திரு.மாரநாடு. திரு.செந்தாமரைக் கண்ணன், திருமதி.செல்வி, திரு.முருகன், திரு.காவேரி உட்பட அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பாண்டிச்சேரி முதல்வர், வேலூரில் நடந்த கட்சி நிர்வாகி பரத் தீபா திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்

வேலூர், செப்.7-

வேலூர் மாவட்டம், அறப்பாக்கம், ரமணி ஏசி திருமண மஹால் திருமண வரவேற்பு விழா, மாவட்ட பிரபல தொழிலதிபரும் என்.ஆர் காங்கிரஸின் வேலூர் மாவட்ட நிர்வாகியுமான பரத் தீபா திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பாண்டிச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி கலந்து கொண்டு மணமக்கள் பரத் தீபா ஆகியோரை



வாழ்த்தினார். இதனைத் தொடர்ந்து மணமக்களுக்கு நெற்றியில் விபூதி திலகமிட்டு, அவர்களை வாழ்த்தி, பூங்கொத்து பரிசளித்து திருமண வாழ்த்து தெரிவித்தார்.

வேலூரில் நடைபெற்ற இந்த திருமண வரவேற்பு நிகழ்வில் பாண்டிச்சேரி மாநில அமைச்சர்கள், என்.ஆர். காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தமிழக அதிமுக, திமுக மற்றும் பிஜேபி, இதரக் கட்சிகளின் தலைவர்கள், நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



# மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம்

திருச்சி, செப்.07-

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுக்கா பொதுச் செயலாளர் வீட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பொறுப்பாளர்களை மாற்றுதல் புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்த பற்றி ஆலோசனை செய்யப்பட்டது வரும் காந்தி ஜெயந்தி முன்னிட்டு பள்ளி குழந்தைகளுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியை பற்றி ஆலோசனை செய்யப்பட்டன

இதில் அமைப்பின் பொதுச்செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராமன் மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான் மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி திருச்சி மாவட்ட தலைவர் ராஜா திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி திருச்சி மாவட்ட துணை தலைவர் ஈஸ்வரி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைத்தலைவர் காந்திமதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி செயலாளர் ரேவதி மற்றும் சரவணன் பாலா ராஜேஸ்வரி சத்தியா கிறிஸ்டி செல்வி அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# ஜி.எஸ்.டி வரி விகிதத்தில் அதிரடி மாற்றங்கள்: மத்திய அரசுக்கு பெருந்தலைவர் காமராஜர் கழகம் கீழப்பாவூர் பி.கே.ஆர். அருணாசலம் நன்றி

## சப்பாத்திக்கு நோ. GST ஆனால் இட்லிக்கு உண்டு

தென்காசி, செப்.07-

தென்காசி மாவட்டம் இந்தியா முழுவதும் வரும் செப்டம்பர் 22 ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட உள்ள ஜிஎஸ்டி வரி விதிப்பு மாற்றங்களை பெருந் தலைவர் காமராஜர் கழகம் மனதார வரவேற்கிறது ஏழை எளிய மக்களின் வாழ்வில் இரட்டை அடுக்கு வரி விதிப்பை செம்மைப் படுத்தி மிகவும் எளிதாக்கி நாட்டின் வளர்ச்சிக்கு சேவை வரி என்பதை குறைத்து உள்ளது. உணவு விஷயத்தில் வடநாட்டினர் அதிகம் விரும்பி சாப்பிடும் சப்பாத்தி ரொட்டி பரதாஸ் ஆகியவற்றிக்கு வரிவி திப்பில் சலுகை வழங்கிய ஒன்றிய நிதி அமைச்சர். தமிழகத்திலுள்ள மக்கள் அதிகம் விரும்பி சாப்பிடும் இட்லிக்கு வரி விலக்கு அளிக்க மறந்துவிட்டாரா? இல்லை மறுத்து விட்டாரா? என்பது தெரிய வில்லை.

இந்நிலையில் வரிகள் எளிமைப்படுத்தப் பட்டு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்ட மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். அவர்கள் நிஷிஜி வரி விதிப்பில் செய்த மாற்றங் களுக்காக பெருந்தலைவர் காமராஜர் கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்படுகிறது.

"உயிர் காக்கும் மருந்துகள் மீது இனி ஜிஎஸ்டி வரி வசூலி க்கப்படாது; பேண்டேஜ் போன்ற மருத்துவ உபகரண ங்களுக்கு 5% வரி வசூலிக்க



ப்படும்"எனவும் (இதுவரை இத்தகைய பொருட்களுக்கு 12% வசூலிக்கப்பட்டது)

ஏசி, டிவி, கார் உள்ளிட்டவற்றுக்கு வரி 28 சதவீதத்தில் இருந்து 18%, ஆக குறைப்பு; டிராக்டர், விவசாய உபகரணங்கள் மீதான ஜிஎஸ்டி வரி 5 சதவீதமாக குறைப்பு..

சாமானிய மக்களுக்கான பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரி 5% ஆக குறைப்பு; UHT பால், ரொட்டி, சப்பாத்தி போன்ற பொ ருட்கள் மீது வரி கிடையாது.

ஆனால் இட்லிக்கு வரி உண்டு

சோப், ஷாம்பூ, டூத் பேஸ்ட் மீது 5% வரி மட்டுமே வசூலிக்கப்படும்; விவசாய உபகரணங்கள் மீதான ஜிஎஸ்டி வரி 5%ஆக குறைப்பு மேலும்

350CC இருசக்கர வாகனங்கள், சொகுசு கார்கள் மற்றும் தனியார் பயன்படுத்தும் விமானங் களுக்கு 40% ஜிஎஸ்டி வரி; அனைத்து மோட்டார் வாகன பாகங்களுக்கும் இனி 18% வரி வசூலிக்கப்படும். ஆட்டோ வாகனங்கள் மீதான ஜிஎஸ்டி வரி 18 சதவீதமாக குறைக்க ப்படுகிறது. இதுவரை ஆட்டோ வாகனங்களுக்கு 28% வரி வசூலிக்கப்பட்டது

நொறுக்கு தீனிகள், வெண்ணெய் போன்ற பொருட்கள் மீது தற்போது 18% வரி வசூலிக்கப்பட்ட நிலையில் இனி 12% வசூலிக்கப்படும்.

பான் மசாலா, சிகரெட், குட்கா, ஜர்தா, கார்ப னேட்டட் குளிர்பானங்கள், சோடா போன்றவற்றுக்கு 40% ஜிஎஸ்டி வரி.

புகையிலை பொருட்கள் மீதான வரி எப்போது அமலுக்கு வரும் என்பதை முடிவு செய்ய ஜிஎஸ்டி கவுன்சில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

பிற பொருட்கள் மீதான புதிய ஜிஎஸ்டி வரிகள், செப்டம்பர் 22 முதல் அமலுக்கு வருகின்றன. ஜி.எஸ்டி வரியை கூட்டினால் அதற்கு கவுன்சில் தான் பொறுப்பு எனவும் விலக்கு அளிக்கும் போது அதற்கு ஒன்றிய அரசுதான் பொதுமக்கள் நலன் கருதி முடிவு செய்யப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இருந்த போதிலும் வரி விதிப்பில் சில மாற்றங்களை செய்ததற்கு பெருந்தலைவர் காமராசர் கழகம் நன்றி தெரிவித்து கொள்கிறது என அதன் நிறுவனத் தலைவர் கீழப்பாவூர் பி.கே.ஆர் அருணாசலம் தெரி வித்துள்ளார்..

# கிழக்கு தாம்பரததில் உள்ள அரசு உதவி பெறும் கிறிஸ்து ராஜா பள்ளியில் ஆசிரியர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

தாம்பரம், செப்.07-

ஒரு நல்ல ஆசிரியராக வாழ்ந்து, ஜனாதிபதி பதவி வரை உயர்ந்து மறைந்த டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரததில் உள்ள அரசு உதவி பெறும் கிறிஸ்து ராஜா பள்ளியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியர் தினவிழாவை யொட்டி மாணவிகள் பள்ளி தலைமை ஆசிரியை சிஸ்டர் ரெனிட்டா, துணை தலைமை ஆசிரியர் சிஸ்டர் ரெக்ஸ்லின் ஆகியோருக்கு பூங்கொத்து கொடுத்து ஆசிரியர் தின வாழ்த்துக்கள்



தெரிவித்தனர். அதனை தொடர்ந்து மாணவிகளின் கண்கவரும் நடன நிகழ்ச்சிக்கள் நடைபெற்றது இதில் பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மாணவிகள், பெற்றோர்கள் என திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது

பம்மல், செப்.07-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் பம்மல் எஸ்.எஸ்.மஹால் திருமண மண்டபத்தில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் அவர்கள் தலைமையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதி நிதிகள் பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே. ரவிச்சந்தின், சு.மனோகரன், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில். குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு



மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ், பல்லவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் L.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஜ. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பாசெல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் பிஎஸ்.ரவி, வட்டக் கழக செயலா ளர்கள் ஏ.அனிஸ்டன், மு.இன்ப சேகர், என்.காந்தி, முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் இக்கூட்டத்தில் வருகிற 08.09.2025 அன்று காலை சென்னை திரும்பும் முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதை வருகிற 10.09.2025 அன்று செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பு குன்றத்தூரில் டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு பூத் வாரியாக பூத் கமிட்டி கூட்டம் நடத்துவது ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவங்கள் சமர்ப்பித்தல் முப்பெரும் விழா குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட மாநகர பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், BLA-2, BLC, BDA, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# நல்லாசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியைக்கு ஊர் பொதுமக்கள் பாராட்டு

தென்காசி, செப்.07-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக இருந்து வருபவர் முனைவர் சீனியம்மாள் ஆகும் இவர் அப்பள்ளியின் 100 சதவீத தேர்ச்சிக்கு சிறந்த முறையில் பணியாற்றி வந்தார் தமிழக அரசு சார்பில் நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட சீனியம்மாளுக்கு தமிழக கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விருது வழங்கி கௌரவித்தார் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளை ஒட்டி கொண்டாடப்படும் ஆசிரியர் தின விழாவில் விருது பெற்ற தலைமை ஆசிரியை சீனியம்மாள் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் ஆசிரிய பெருமக்கள் அரியநாயகிபுரம் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் உறவினர்கள் பள்ளி மாணவ மாணவிகள் மேலாண்மை குழு உறுப்பினர்கள் சக ஆசிரிய ஆசிரியைகள் ஆகியோர் நேரிலும் அலைபேசியிலும் வாழ்த்து தெரி வித்து வருகின்றனர்..



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சேர்வரூணி வைக்கல் கரை அருகே ரேஷன் அரிசியை, குடிமை பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் தேர்தல் ஆணைய சோதனை நடத்தினர் அங்கு 22 பைகள் (1100 கிலோ) பொது விநியோக அரிசி கண்டுபிடிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட சந்திரன் சம்பவ இடத்தில் மீட்கப்பட்டார். விசாரணையில், குற்றம் சாட்டப்பட்டவர் அருகிலுள்ள கிராமங்களில் பொதுமக்களிடமிருந்து பொது விநியோக அரிசியை சேகரித்து, அதை மாவாக மாற்றி, சட்டவிரோத தனிப்பட்ட லாபத்திற்காக கால்நடை பண்ணைகளுக்கு விற்று வந்தது

# ஒரேநாளில் பத்திரப் பதிவு மூலம் ரூ.274 கோடி வருவாய்: அமைச்சர் மூர்த்தி தகவல்

சென்னை, செப்.07-

ஆவணி மாத சுபமுகூர்த்த நாளான நேற்று முன் தினம் செப்.4ம் தேதி ஒரேநாளில் பத்திரப்பதிவு வரலாற் றில் இதுவரை இல்லாத அளவு ரூ.274.41 கோடி வரு வாய் ஈட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, ஆவணி மாதம் சுபமுகூர்த்த தினமான நேற்று முன்தினம் செப்.4ம் தேதி கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கப்பட் டன. இதன்மூலம், பதிவுத்துறை வரலாற்றில் இதுவரை யில் இல்லாத அளவில் இந்த 202526ம் நிதியாண்டில், ஒரேநாளில் அரசுக்கு ரூ.274.41 கோடி வருவாய் ஈட்டி பதிவுத்துறை புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

இதற்கு முன்னதாக, இதே 202526ம் நிதியாண்டில், கடந்த ஏப்.30ம் தேதி பதிவுத்துறையில் ஒரேநாளில் அரசுக்கு ரூ.272.32 கோடி வருவாய் ஈட்டப்பட்டது குறிப் பிடத்தக்கது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மற்றும் பாபா கார்டன் அமைந்துள்ள பாபா மெட்ரிக் பள்ளியில் ஆசிரியர் தின விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பள்ளியின் தாளாளர் ஸி.கபிலன் தலைமையேற்றார். இவ்விழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பள்ளியின் நிர்வாகி மீனாட்சி பரிசுகளை வழங்கினார். பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் ஒன்றுகூடி பள்ளியின் நிறுவனர் ராஜேஸ்வரி பூக்கொத்துகளைக் கொடுத்து எழுதுபலகையில் ஆசிரிய தின வாழ்த்துகள் எழுதி அணிவகுத்து வரவேற்றனர். விழாவின் ஏற்பாடுகளை முதல்வர் திருமதி.வி.சாரதா அவர்கள் செய்திருந்தார். பாபா மெட்ரிக் பள்ளியில் பணிபுரியும் ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் குழந்தைகள் பரிசுகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பள்ளியின் சார்பாக ஆசிரியர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரிய பணி அறப்பணி அதற்கு உன்னை அற்பணி என்ற சொல்லுக்கு ஏற்றார்போல் திகழும் எம்பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பிக்கப்பட்டது.



ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒன்றியம் பி. புத்தூர் கிராமத்தில்

# ஸ்ரீ மந்தையம்மன் கோவில் முளைப்பாரி திருவிழாவை முன்னிட்டு முளைப்பாரி ஊர்வலம்

ராமநாதபுரம், செப்.07-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒன்றியம் பி. புத்தூர் கிராமத்தில் ஸ்ரீ மந்தையம்மன் கோவில் முளைப்பாரி திருவிழாவை முன்னிட்டு புதன் கிழமை முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது.

இந்த கோவிலில் கடந்த 26 ஆம் தேதி முளை ப்பாரி திருவிழா காப்பு கட்டுதலுடன் தொடங் கியது.

பி.புத்தூர் கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் காப்பு கட்டி விரதம் இருந்தனர். நூற்று கணக்கான பெண்கள் கோவிலில் முளைப்பாரி வளர்த்தனர். தினமும் மந்தை அம்மனுக்கும் முளைப்பாரிகளுக்கும் சிறப்பு பூஜைகள், தீபாரத னைகள் நடைபெற்றன. செவ்வாய் கிழமை இரவு பெண்கள் முளைப் பாரிகளை சுற்றி கும்மி பாட்டு பாடினர். ஆண்கள் ஒயிலாட்டம் ஆடினர்.



இதனை தொடர்ந்து புதன் கிழமை நடைபெற்ற முளைப்பாரி ஊர்வலத்தில் நூற்று கணக்கான பெண்கள் முளைப்பாரி சட்டிகளை தலையில் சுமந்து மேல தாளத்துடன் கண்மாய்க்கு சென்றனர். தண்ணீரில் முளைப் பாரிகளை கரைத்தனர். இதில் பி.புத்தூர் கிராமத்தை சேர்ந்த ஏராளமானோர் குடும்பத்துடன் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161